## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | CC 76/2025 |
| Deposition of witness | : | PW-9 |
| Name | : | சந்தோஷ் வேல் |
| Father Name | : | வடிவேல் |
| Age | : | 33 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20.02.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது குன்னத்தூர் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் பி ஏ ஹிஸ்டரி படித்துள்ளேன். குன்னத்தூர் காவல் நிலைய குற்ற எண் 266 of 2025 வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை கேமரா பதிவுகளை பார்க்க சொன்னார். அதன் பேரில் கடந்த 08.07.2025 ஆம் தேதி சின்ன கவுண்டன் வலசு, ஆதியூர் ரோட்டில் சுப்பிரமணி என்பவர் கடையில் வெளியில் உள்ள கேமராவை பார்வையிட்டு காலை 07.54-07.56 மணிக்கான பதிவில் புகார்தாரர் சாலையில் செல்வதும், இருசக்கர வாகனத்தில் வரும் இருவர் அவரை கடந்து சென்று மீண்டும் யூ டர்ன் போட்டு வருவதும் தெரிந்தது. அதனை முதலாவது பதிவாக சேகரித்தேன்.

2. அங்கிருந்து சுமார் 400 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஏர் இந்தியா என்ற பெயர் கொண்ட டெக்ஸ்டைல் நிறுவனத்தின் வெளிப்புறத்தில் உள்ள கேமராக்களை பார்த்த போது, 07.57-07.58 மணி அளவில் சம்பவத்தில் ஈடுபட்டதாக சந்தேகப்படும் வாகனம் கேமராவை

கடந்து சென்றதை பார்க்க முடிந்தது. அதனை இரண்டாவது பதிவாக சேகரித்தேன்.

3. மேலும் அந்த வழியில் கண்காணித்த போது சுமார் 2.5 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள காவல் நிலைய கேமராக்கள் இருந்தது. அதில் பெருமாநல்லூர் சாலை வழியாக 08.08-08.09 மணிக்கு அதே வாகனம் கடந்து சென்றது என்பதை கண்டு, அந்த பதிவையும் சேகரித்தேன்.

4. நான் மேலும் அங்கிருந்து 5 கிலோமீட்டர் தள்ளி அமைந்துள்ள தட்டான் குட்டை அரோமா பேக்கரில் உள்ள கேமராக்கள் D7 மற்றும் D8 பார்த்தபோது, 08.23-08.24 மணிக்கு அதே வாகனத்தில் வருபவர்களின் முன்புறமும், பின்புறமும் தெளிவாக தெரிந்தது. அதனையும் சயின்டிஸ் கருப்பு சிவப்பு நிற பென் டிரைவில் பதிவேற்றிக் கொண்டேன். அந்த நான்கு பதிவுகள் கொண்ட பென் டிரைவை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பென்டிரைவ் என்னால் கொடுக்கப்பட்ட பென் ட்ரைவ் ஆகும். அதற்கான சாட்சிய சான்றினையும் தாக்கல் செய்துள்ளேன். **(மேற்படி பென்டிரைவ் அ.சா.ஆ.10 ஆகவும், அதற்கான சாட்சிய சான்று அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

5. நான் பார்வையிட்ட வரையில் முதலாவது கேமராவில் மட்டும் நேரம் சுமார் 10 நிமிடங்கள் பின்தங்கி இருந்தது. மற்ற கேமராக்கள் நல்ல நிலைமையிலும், சரியான நேரத்திலும் இருந்தது. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு பற்றிய முழு விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. என்னை கேமரா பதிவுகள் சேகரிக்குமாறு வாய்மொழி உத்தரவு தான் வழங்கப்பட்டது. நான் அதனை எனது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேன். மேற்படி புத்தகத்தை தற்போது காட்ட இயலுமா என்றால், அது சென்ற வருடத்தில் உள்ள புத்தகம் என்பதால் சரண்டர் செய்துவிட்டேன். நான் கேமரா பதிவுகளை கொடுத்த அன்றைய தினமே என்னை ஆய்வாளர் விசாரித்தார். முதல் கேமரா அமைந்திருந்த இடத்திற்கும், சம்பவ இடத்திற்கும் இடையே எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் சுமார் 50 மீட்டருக்குள்ள்ளாக தான் இருக்கும்.

2. சம்பவ இடத்தின் அருகே உள்ள வனிதாவின் வீட்டில் கேமரா பதிவுகள் எடுக்கப்பட்டதா என்றால், அவரது வீட்டில் கேமரா பதிவுகள் கரப்ட் ஆகி இருந்ததால் தான் சுப்பிரமணி என்பவர் கடையிலிருந்து கேமரா பதிவுகள் எடுக்கப்பட்டது. நான் இந்த விவரத்தை எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தின் அருகே உள்ள ராகவேந்தரா கடையில் கேமரா உள்ளதா என்றால் இல்லை. சம்பவ இடத்தின் அருகே உள்ள சின்னசாமி காம்ளக்ஸ் கேமரா பதிவுகள் எடுக்கப்பட்டதா, அவர்களது கேமரா குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே செயல்படுவதால் சம்பவ சமயத்தில் அதில் கேமரா ஃபுட்டேஜ் இல்லை.

3. மேற்படி கேமரா பதிவுகளை சேகரிக்க நான் எழுத்து மூலமாக அதன் உரிமையாளர் வசம் இருந்து ஒப்புகை பெற்றேனா என்றால் இல்லை, வாய்மொழியாக தான் அனுமதி பெற்றேன். அந்த உரிமையாளர்களை காவல் ஆய்வாளர் விசாரித்தார். நான் தாக்கல் செய்த

சாட்சிய சான்றில் வழக்கின் குற்ற எண் மற்றும் பிரிவு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் மேற்சொன்ன கேமரா பதிவுகளுக்கு உண்டான சான்றுகளை மட்டும் தான் கொடுத்துள்ளேன். நான் 08.07.2025 தேதியில் கேமரா பதிவுகளை சேகரித்ததாக சொல்லும் நிலையில் நான் கொடுத்துள்ள சான்றில் 08.08.2025 தேதியிட்டு, சேகரித்து ஒரு மாதம் கழித்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

4. சம்பவ இடத்திலிருந்து எந்த ஒரு கேமரா பதிவுகளையும் நீதிமன்றத்தில் முன்வைக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து புகார்தரார் வீடு சுமார் 100 மீட்டர் தொலைவில் உள்ளது. நான் சேகரித்த கேமரா பதிவில் அந்த வாகனத்தில் நம்பர் பிளேட் உள்ளதா என்றால் உள்ளது. அதன் எண் சொல்ல இயலுமா என்றால் பிலர் ஆக இருந்தது, நம்பர் சரியாக தெரியவில்லை. நான் இந்த விவரத்தை எனது உயர் அதிகாரிக்கு வாக்குமூலத்தில் தெரிவித்தேன். 08.07.2025 ஆம் தேதி தான் நான் வீடியோ ஆதாரங்களை சேகரித்தேன் என்றால் சரிதான். நான் கேமரா பதிவுகள் எந்த நேரத்தில் சேகரித்தேன் என்று சொல்ல இயலுமா என்றால், மதியத்திற்கு மேல் தான் சேகரித்தேன். அவ்வாறு சேகரிக்க என்னுடன் வேறு யாரும் வரவில்லை. வேறு ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட வீடியோ ஆதாரங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.02.20 18:35:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.